# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

## *2021 ஆம் ஆண்டு யூலை மாதம் 30 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி*

*(2021.08.02 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*

# குடிவருவோர், குடியகல்வோர் (திருத்தம்)

***(351 ஆம் அத்தியாயமான) குடிவருவோர், குடியகல்வோர் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

பாதுகாப்பு அமைச்சர் அவர்களால்
பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 12.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**சட்டப்பயன்பற்றிய கூற்று**

**வாசகம் 2** : இவ்வாசகம், *(351 ஆம் அத்தியாயமான)* குடிவருவோர், குடியகல்வோர் சட்டத்தின் *14* ஆம் பிரிவைத் திருத்துவதுடன், அவ்வாசகத்தின் சட்டப்பயனானது, விசா ஒன்றின் காலப்பகுதியை அதிகரிப்பதற்கும் நிரந்தர வதிவிட விசாவின் காலப்பகுதியை அமைச்சர் தீர்மானிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்குமாகும்.

ச.வ. - ஓ. 24/2018

## (351 ஆம் அத்தியாயமான) குடிவருவோர், குடியகல்வோர் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

**1.** இச்சட்டம், 2021 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, குடிவருவோர், குடியகல்வோர் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். *சுருக்கப் பெயர்*

**2.** (351 ஆம் அத்தியாயமான) குடிவருவோர், குடியகல்வோர் சட்டத்தின் 14ஆம் பிரிவு, இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:- *351 ஆம் அத்தியாயத்தின் 14 ஆம் பிரிவைத் திருத்துதல்*

(1) அதன் (1) ஆம் உட்பிரிவில், “இரண்டு ஆண்டுகளை,” என்னும் சொற்களுக்குப் பதிலாக, “ஐந்து ஆண்டுகளை,” என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(2) அதன் (2) ஆம் உட்பிரிவில், “ஐந்தாண்டுகளை விஞ்சாத ஆனால் இரண்டு ஆண்டுகளை விஞ்சிய” என்னும் சொற்களுக்குப் பதிலாக, “பத்தாண்டுகளை விஞ்சாத ஆனால் ஐந்து ஆண்டுகளை விஞ்சிய” என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(3) அதன் (3) ஆம் உட்பிரிவை உடனடுத்து, பின்வரும் உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும் :-

“(3அ) (அ) ஓராம் மற்றும் (2) ஆம் உட்பிரிவுகளில் குறித்துரைக்கப்பட்ட காலவரையறைகள் எவ்வாறிருப்பினும், நிரந்தர வதிவிட விசாவின் காலப்பகுதி அமைச்சரினால் தீர்மானிக்கப்படலாம்.

(ஆ) பந்தி (அ) இன் நோக்கத்துக்காக, “நிரந்தர வதிவிட விசா” என்பது, இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதிகளின்கீழ் வழங்கப்பட்ட விசா ஒன்று எனப் பொருள்படும்.”

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்*

**3.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.